**நகராட்சி நிர்வாக ஆணையரகம்,**
**சேப்பாக்கம், சென்னை – 600 005.**

**சுற்றறிக்கை**

**ந.க.எண்.44966/2001/எல்4** **நாள்: 11 .06.2007.**

பொருள் : **உள்ளாட்சி நிதித் தணிக்கை - நகராட்சி மற்றும் மாநகராட்சிகள் (சென்னை தவிர)** – நீண்டகால நிலுவைத் தணிக்கைத் தடையை நிவர்த்தி செய்ய மாநில மற்றும் மாவட்ட அளவிலான இரு உயர்மட்டக் குழுக்களை திருத்தியமைத்தல் - அக்குழுக்களின் பணிகள் மற்றும் அதிகாரஙகள் வரையறுத்தல் – ஆணைகள் வெளியிடப்பட்டது - தொடர் நடவடிக்கை எடுத்தல் - தொடர்பாக

பார்வை : அரசாணை (நிலை) எண்.65, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை, நாள்.22.05.2007.

-0-0-0-0-0-0-

பார்வையில கண்ட அரசாணை நகல் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

சென்னை நீஙகலாக இதர 5 மாநகராட்சிகளில் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை எழுப்பிய தணிக்கைத் தடைகளை தீர்வு செய்யவும், மாவட்டக் குழுவின் செயல்பாடுகளை கண்காணிக்கவும், மாவட்ட குழுவால் தீர்வு செய்ய இயலாத தணிக்கைத் தடைகளை தீர்வு செய்யவும், மாநில அளவில் நகராட்சி நிர்வாக ஆணையர் தலைமையிலான ஒரு குழுவும், இதர நகராட்சிகளில் உள்ள நிலுவையிலுள்ள தணிக்கைத் தடைகளை தீர்வு செய்ய மாவட்ட அளவில் நிதி ஆலோசகர் தலைமையிலான ஒரு குழுவும் அரசால் அமைக்கப்பட்டுள்ளது.

தணிக்கைத் தடைகளை விரைந்து தீர்வு செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள இக்குழுக்களில் மாநில அளவிலான குழு தேவைக்கேற்பவும், வருடத்தில் குறைந்தது இரண்டு கூட்டமாவதும் கூட்டப்பட உள்ளது.

மாநகராட்சிகளில் நிலுவை பத்திகளின் எண்ணிக்கை நிலுவைகள் கீழ்க்கண்டவாறு உள்ளன.

| மாநகராட்சிகள் | நிலுவை பத்திகளின் எண்ணிக்கை |
|---|---|
| மதுரை | 19968 |
| திருச்சி | 6955 |
| கோயம்புத்தூர் | 9660 |
| சேலம் | 4625 |
| திருநெல்வேலி | 3701 |
| **மொத்தம்** | **44909** |

நகராட்சிகளில் நிலுவையாக உள்ள தணிக்கைத் தடைகளின் விவரம் மண்டல வாரியாக கீழே தரப்பட்டுள்ளது.

| மண்டலம் | பத்திகளின் எண்ணிக்கை |
|---|---|
| செஙகற்பட்டு | 21723 |
| வேலூர் | 11014 |
| சேலம் | 10906 |
| திருப்பூர் | 13187 |
| தஞ்சாவூர் | 22454 |
| மதுரை | 14896 |
| திருநெல்வேலி | 16814 |
| **மொத்தம்** | **110994** |

மாநகராட்சிகளின் தணிக்கைத் தடைகளை தீர்வு செய்ய மாநில அளவிலான குழுவில் ஒரு உறுப்பினராகவும், குழுவினை கூட்டுபவராகவும் உள்ள இந்த ஆணையரக நிதி ஆலோசகர் தேவையான முன்ஏற்பாடுகளை செய்யவேண்டி உள்ளது. எனவே சென்னை நீஙகலாக பிற மாநகராட்சிகளின் ஆணையர்கள் நிலுவையிலுள்ள அனைத்து தணிக்கைப் பத்திகளுக்கும் நிதியாண்டு வாரியாக சரியான பதிலினை தயாரித்து (6 நகல்கள்) இந்த சுற்றறிக்கை கிடைக்கப்பெற்ற 20 தினஙகளுக்குள் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் நிதி ஆலோசகரிடம் தனிநபர் மூலம் நேரில் ஒப்படைக்கவேண்டும்.

நிலுவைப்பத்திகள் அதிக எண்ணிக்கையில் இருந்து, சில பத்திகளுக்கு ஆவணஙகள் கிடைக்கப்பெறாமையால் பதில் தயாரிக்க உடனடியாக இயலாத சூழ்நிலை இருப்பின், அத்தகைய பத்திகளுக்கான பதிலை இரண்டாவது கட்டமாக தரலாம். இய்னறவரை பதில்களை தயாரித்து குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் ஒப்படைத்தால், மாநில அளவிலான குழுவின் கூட்டத்தினை ஜீலை 2007 முதல் வாரத்தில் கூட்ட இயலும்.

மாநில அளவிலான குழுவின் கூட்டம் சம்பந்தப்பட்ட மாநகராட்சியிலோ அல்லது நகராட்சி நிர்வாக ஆணையரின் அலுவலகத்திலோ கூட்டப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

<u>**நகராட்சிகள்**</u>

நகராட்சிகளில் நிலுவையாக உள்ள தணிக்கைத் தடைகளை தீர்வு செய்வதற்கென அமைக்கப்பட்டுள்ள மாவட்ட குழுவினை கூட்டும் பொறுப்பினை அந்தந்த நகராட்சி நிர்வாக மண்டல இயககுநர் கவனிக்க வேண்டும்.

மாவட்ட குழுவினை கூட்டும் முன்பாக அந்தந்த மண்டலத்திலுள்ள அனைத்து நகராட்சிகளில் (மூன்றாம் நிலை நகராட்சிகள் உட்பட) நிலுவையாக உள்ள தணிக்கைத் தடைகளுக்கு <u>விரிவான, சரியான, குழு ஏற்கும்படியான</u> பதில்களை அந்தந்த நகராட்சி ஆணையர்களை தயாரிக்கச் செய்து (6 நகல்கள்), கணிசமான எண்ணிக்கையில் பதில்கள் தயாராக இருக்கும்பட்சத்தில், குழுவின் தலைவரான நிதி ஆலோசகருக்கும், உள்ளாட்சி நிதி தணிக்கை துறை மண்டல இயக்குநருக்கும் பதிலின் நகல் ஒன்றினை முன்கூட்டியே

அனுப்பிவைத்தால் மாவட்ட வாரியாக தணிக்கைத் தடை தீர்வுக் கூட்டத்தினை நடத்த இயலும்.

மாவட்டக் குழு கூட்டம் மாவட்டத்திலுள்ள அனைத்து நகராட்சிகளுக்கும் சேர்த்து மாவட்ட தலைநகரில் நடத்தப்படும். எனவே மாவட்ட வாரியாக தணிக்கைத் தடை தீர்வுக் கூட்டத்தினை நடத்த நகராட்சிகள் நிர்வாக மண்டல இயக்குநர் தேவையான ஏற்பாடுகளை செய்திட வேண்டும். முதல்கட்டமாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள் கீழ்க்கண்ட படிவத்தில் 20.06.2007க்குள் அறிக்கை தருமாறு வேண்டப்படுகிறது.

| **மாவட்டத்தின் பெயர் :** | | | |
|---|---|---|---|
| **வரிசை எண்.** | **நகராட்சிகளின் பெயர்** | **நிலுவைத் தணிக்கைப் பத்திகளின் எண்ணிக்கை** | **பதில்கள் தயாரிக்கப்பட்ட பத்திகளின் எண்ணிக்கை** |
| **(1)** | **(2)** | **(3)** | **(4)** |
| | | | |

தணிக்கைத் தடைகளை விரைந்து தீர்வு செய்வதற்கு ஏதுவாக, அனைத்து நகராட்சிகளின் ஆணையர்களும் ஆண்டுவாரியாக தணிக்கைத் தடைகளுக்கான பதில்களை உடனடியாக தயாரித்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கு 6 நகல்களில் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. இவ்வாறு பதில்களை தயாரிக்கும்போது நிபந்தனையுடன் ஒய்வு பெற்று அல்லது தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு தணிக்கை தடைகள் நிலுவை காரணமாக ஒய்வுகாலப் பயன்கள் பெற இயலாமல் உள்ள ஆணையர்கள் / பொறியாளர்கள் / இதர பணியாளர்கள் தொடர்பான நிலுவைத் தணிக்கைத் தடைகள் மற்றும் அடுத்த ஓரிரு ஆண்டுகளுக்குள் ஒய்வு பெற உள்ள அலுவலர்கள் தொடர்பான நிலுவை தணிக்கைத் தடைகளுக்கான பதில்களை முன்னுரிமை தந்து தயாரித்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கு சமர்ப்பிக்க அறிவுறுத்தப்படுகிறது.

மாவட்டக் குழுவின் கூட்டம் 20.06.2007க்கு மேல் தொடர்ந்து நடைபெற உள்ளதால் அனைத்து நகராட்சி ஆணையர்கள், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள் மற்றும் மாநகராட்சி ஆணையர்கள் இப்பணியில் முழுக் கவனம் செலுத்திடுமாறு வேண்டப்படுகிறது.

**ஒம்/– டாக்டர். நிரஞ்சன் மார்டி**
**நகராட்சி நிர்வாக ஆணையர்.**

பெறுநர்

1) அனைத்து மாநகராட்சி ஆணையர்கள் (சென்னை நீஙகலாக).
2) அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள்.
3) அனைத்து நகராட்சி ஆணையர்கள்.

<u>நகல் :</u>
1) உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநர், சென்னை-108 – அனைத்து மண்டல துணை இயக்குநர்கள் மற்றும் உதவி இயக்குநர்களுக்கும் தக்க அறிவுரைகள் வழஙக வேண்டப்படுகிறது.
2) அனைத்து மண்டல துணை இயக்குநர்கள், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை,

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**கண்காணிப்பாளர்.**